செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

உ

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்து சாதனம்

சிவமயம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ௦] யாழ்ப்பாணம்:- கீலக ஞு புரட்டாதி மீ உரு உ வெள்ளிக்கிழமை (11-10-1968) [இல-உள

## நாவலர் தருமத்தைப் பாதுகாத்தல்

'சிந்தியுங்கள்' என்ற நாமத்துடன் நாவலர் தருமத்தைப்பற்றி ஐந்துசைவாபிமானிகளுடைய பெயர்களுடன் ஒருவிண்ணப்பம் எமக்குக்கிடைத்தது, அதில நாவலர்பெருமானுக்குச் சிலைபமைப்பதுடன் நாவலருடைய தருமங்களையும் பாதுகாத்தல் அவசியமென்பதை அவ்விண்ணப்பம் சுட்டிக்காட்டுகின்றது. அவ்விண்ணப்பத்தின் சில பாகங்களைக் கீழே தருகின்றேம்.

"யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவிலும் இன்னும் இந்த நாட்டில பிற பலரது ஆதரவிலும் 28-10-1967 அன்று நாவலர் ஆச்சிரம மண்டபத்தில ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதன் விளைவாக ஆக்கமுற்ற ஒரு சபையினரால, நாவலர் அவர்களது தருமச் சொத்துக்களை ஈழநாட்டிலும் தமிழநாட்டிலும் சேதமுருதபடி பாதுகாககவும், அவற்றை நாவலர் அவர்களது நோக்கப்படியும் அவரது பிரதமசீடர் ந. க. சதாசிவம்பிள்ளை அவர்கள் சாதன ஒழுங்குப்படியும் வளர்ச்சி உறுமாறு நடாததத் தீர்மானஞ் செய்யப்பட்டது.

இந்த சபையினர் அதற்கேற்றவாறு பல ஒழுங்குகளையும் சிந்தித்து ஒரு விரிவான மகஜர் தயாரிதது எமது பிரதம மந்திரி முதல் பலருக்கு அனுப்பியிருக்கிருர்கள்.

இவையெல்லாம் நடைபெறும்போது நாம் மகிழ்ச்சிக்குரிய இன்னுமொரு சமபவத்தை அறியும்போது நமது உணர்ச்சயில் எழுந்துள்ள கருத்தை யாவருக்கும் தெரிய வெளியிடுவதோடு இச்சமயத்தில் நாங்கள் இவ்விண்ணப்பததை வெளியிடாமலிருக்க முடியாது.

நடைமுறைத் தமிழியக்க ஆதரவில் கொழும்பிலே நாவலர் அவர்கள்மீது அபிமானமபூணடு உணடாக்கப்பட்ட செயற்குழு ஆற்ற, முன்வரும் தொண்டு சம்பந்தமாக 19-6-1958 ல 'தினகரன்' இதழிலே வெளியிட்ட விபரம் கண்டோம்.

நல்லூரிலே 1874 - ஆம் ஆண்டில் அவர் வாங்கிய நிலத்திலே அதே ஆண்டில் அவரால் நடாத்துவிக்கப்பெற்ற திருஞான சம்பநத மூர்த்திநாயனர் குருபூசை, அந்த நிலததல் இராகவப்பிள்ளை, செலவநாயகபிள்ளை எனனும இருவராலும் கட்டுவிக்கப்பட்ட மடததிலே சிறபபாக நடைபெற்றது. திருவாவடுதுறையி லிருந்து ஓதுவாாகளை வருவித்து தேவாரபாடசாலையும் நடாத்தப்பெற்றது. சென்ற ஆண்டிலே வடமாகிலக் கல்வி அதிகாரி திருமதி நவரததினம அநத நிலததில் நல்லூர் திருவிழாக காலத்தில் நாவலர்மணடபம என ஒரு கட்டடம அமைத்துத்தேவாரவகுப்புநடாததியதும் யாவருமஅறிநததே.

எனவே எமது நாட்டிலே நாவலா அவர்களின அபிமானிகளும தேசாபிமானிகளும் சைவமும் தமிழும் வளர நாவலரவர்கள் கொணடுள்ள கருத்துக்களை நிறைவேற்ற மனப்பூர்வமாக முன்வரவேணடியதே நாவலர் அவர்களுககுச் செய்யும கடமையாகும்.

தாங்கள் தங்கள் ஒவ்வொருவரதும் அதிப்பிரியமுள்ள நாவலர்பெருமானை நினைநது அவர்பெயரால் மேற்படி நாவலா சாதனங்களின்படியும அவர் கையெழுததோடு வெளியிடப்படட விஞ்ஞாபனதத்ன் படியும் தருயப்பணியை நிறைவேற்றி அதி சீக்கரத்தில பணியை முடிப்பீாகளாயின பெரும புண்ணியம! பெரும் புணணியம!! நாளை நாளை எனபது தகாது! தகாது!! நிறைவேற்றுவீர்களென ற நமபுகின்றும்.

### நாவலர் சொற் கேளீர்

புண்ணியங்களாவன யாவை?

கடவுளை வழிபடுதல, தாய், தகப்பன், உபாத்தியாயர், குரு முதலாகிய பெரியோர்களை வணஙகுதல, உயிர்களுக்கு இரங்குதல், உண்மை பேசுதல, செய்ந்நன்றி யறிதல் முதலானவைகள்.

(சைவவினுவிடை முதற் புத்தகம்)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

வையக முற்று மாமழை
மறந்து
வயலி னீரிலை மாநிலந்
தருகோம்
உய்யக் கொள்கமற்
றெங்களை யென்ன
வொளிகொள் வெண்முகி
லாய்ப் பரந்தெங்கும்
பெய்யு மாமழைப்
பெரு வெள்ளந்
தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு
வேலி கொண்டருளுஞ்
செய்கை கண்டுநின்
றிருவடி யடைந்தேன்
செழும்பொழிற்றிருப்
புன் கூருளானே.

திருச்சிற்றம்பலம்

-சுந்தரமூர்த்திசுவாமிகள்.

### நாவலர் நல்வாக்கு

பிறர் பொருளைக் கவர்தற்குப் பலவகையால் வன்மை இருந்தும் அது செய்யாதவன் எவனே, அவனே அவருக்கு அப்பொருளனைத்தையும் கொடுத்தவன் ஆவன்.

நேயர்கள் நெஞ்சம்

## 9-ம் வகுப்புத் தமிழ்மலர்

தங்கள் மேலான இந்துசாதனப் பத்திரிகையின் 27-9-68 தேதிப் பிரசுரத்திலே இந்து மாமன்றத் தீர்மானங்கள் என்ற தலைப்பில 7-ஆவது பந்தியைப் படித்தேன். 9 ஆம் வகுப்புத் தமிழ் மலரிலே சைவசமயக் கொள்கைகளுக்கு மாருகப் பாடங்கள் பிரசுரிக்கபபட்டதாகக் காணப்படுகிறது அது தவறு. அந்நூலில அத்தகையபாடங்கள் பிரசுரிக்கப்படவில்லை. சில பாடங்களிலே வரும் சொறறெருடர்களும், வசனங்களும் சைவசமயக் கொள்கைகளுக்கு மாருனவையென அகில இலங்கை இந்து மாமன்றம கல்வி மந்திரிக்கு ஒருகடிதம் எழுதப்போவதாகத் தீர்மானித்ததை நாம் அறிவோம். பினனர் இப்போ கல்வியதிகாரிக்கு முறையிட்டதாக நீங்கள் பிரசுரித்த செய்தி கூறுகிறது. ஆகவே அந்தத்தீர்மானம முடிவானதோ தெரியவில்லை.

தீர்மானங்கள் அடிக்கடி மாறுவது மனித இயற்கை. இத தீர்மானங்கள் எப்படிப் பட்டவையாயிருந்தாலும், நூலிலே அகில இலங்கை இந்து மாமன்றம் கண்ட சைவசமயக் கொள்கைகளுக்குமாருனதென அம்மன்றத்தார் உணர்ந்தவசனங்களையும் சொற்றொடர்களையும் சைவனென்ற முறையில் நான் கருததோடு படிததேன். என்னுடைய கருத்துப்படி அவற்றில் ஒரு சொல்லாவது சைவத்துக்கு மாருனவையில்லை. சைவ சமயக் கொள்கைகளுக்கு மாருனவையாக மன்றத்தார்பொறுக்கிஎடுத்த வசனங்களைப் பொதுசனங்களுக்கு அறிவிப்பார்களா? சைவமக்கள் பகிரங்கமாக அறிந்து கொள்ள மன்றம் கண்ட பிழைகளை வெளிப்படுத்துவார்களா?

இங்ஙனம்,
தமிழாசிரியன்.

யாழ்ப்பாணம்,
5-10-68,

## காந்தியடிகள் உள்ளம் உவக்க வாழ்வோமாக

[ புலோலியூர் திரு. செ. தருமராசா அவர்கள் ]

உலகத்தில் கோடிக்கணக்கானேர்தோன்றுகிருர்கள். ஏதோ பிறந்து விட்டோம் என்ற மனப்பான்மையில் வாழ்ந்து காலப்போக்கில் மண்ணேடு மண்ணுகி விடுகிருர்கள். அவர்களைப் பற்றி அவர்கள் வாழ்ந்தகாலச் சந்ததி யினருக்கே தெரியாமல் தம்பூதவுடலைத் துறந்து விடுகின்றனர். ஆனல் தெய்வத்தின் பிரதிநிதிகள் என்று கூறப்படும் உலகம் போற்றும் உத்தமர்கள் மக்கள் உள்ளத்தாமரையில் என்றென்றும் சிரஞ்சீவித்தன்மை பெற்று விடுகின்றனர். அவர்கள் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து தம் உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்து, பிறரின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு வாழ்கிருர்கள். அங்ஙனம் உலகை உய்விக்க உதித்த உத்தமர்களின் வரிசையில் உன்னதயான இடத்தைஅண்ணல் மகாத்மா காந்தி பெற்றிருக்கிருர், அந்தத்தூயவரின் நூற்றுண்டு விழா ஒரு வருடகாலம் சாதி, மதம், இடம் என்ற பேதங்களில்லாமல் உலகெங்கணும் விமரிசையாகக் கொண்டாடப்பட விருக்கிறது. காந்தியடிகளின் உள்ளம் உவக்க வாழ்வோமாக,

உலகமாதா 30-1-1948 -ம் ஆண்டு கண்ணீர் சிந்தி அழுது கொண்டிருந்தாள். அன்று ஒரு சோகமான, பாதகம் நிறைந்த ஒரு சம்பவம் நிகழ்ந்தது தெரிய வரும். ஆம்! அன்றுதான் நஞ்சினும்கொடிய இளைஞன் நாதூராசம் கோட்சே என்பவன் கள்ளம் கபடமற்ற உலகத்தலைவர்களில் சிறந்தவொருவரை-செம்மல் காந்தியைத் தன் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாக்கினன். போர்க்களத்திலே முன்னின்று பொருதி மாய்ந்து சரித்திரத்தில் வீரர் பட்டியலில் பொறிக்கப்படும் வீரர்கள்போல் தானும் ஓர் இடத்தைப் பெற்றுவிடலாம் என்று அவன் கருதியிருக்கலாம். ஆனல் வரலாற்றாசிரியர்கள் அவனின் செயலின் இழிவை அறிந்து, ஒரே முகமாய் அவனைத் துரோகிகளின் வரிசையிற் சேர்த்து விட்டனர். காந்தியைச் சுட்டதின் பலனை அவன் பெற்றிருக்க வேண்டுமாயின் அவரது பொன்னான கருத்துக்களையும், மயக்கற்ற வார்த்தைகளையும் மக்கள் மத்தியி லிருந்து நீக்கியிருக்க வேண்டும். அவரது பூதவுடலை மட்டும் நீக்கினனேயொழிய அன்னாரது புகழுடம்பை அவனுல் அழித்து விட முடியவில்லை.

இந்த ஆத்திரமூட்டும் செய்கையால் அவரது தூய கருத்துக்களும், புகழும் பாரினில் எல்லாரிடமும், எங்கும சிறகடித்துப் பறந்தன.

அண்ணல் மகாத்மாகாந்தி கரம்சாண்ட் அல்லது கபா காந்தி என்பவருக்கும் புற்லிப்பாய் என்னும் மங்கை நல்லாளுக்கும் சற்புத்திரராய் 2.10.1869-ம் ஆண்டு இந்தியாவில் போப்பந்தர் என்ற விடத்தில் அவதரித்தார்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

பக்திக்கு அடுத்தது சுத்தம் சுத்தம் சுகம் தரும்.




மில்க்வைற்சோப்

வாங்கிப் பாவித்து

அதிக இலாபமடையுங்கள்.

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

# இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

கீலகஞு புரட்டாதி உரு-௨ வெள்ளிக்கிழமை [1968]

## காந்தியடிகளின் நூற்றுண்டுவிழாவும் மரவரியும்

காந்தியடிகளுடைய நூற்றுண்டு ஜயந்திவிழா 2-10-68-ல் ஆரம்பமாகிவிட்டது. தொடர்ந்து ஒருவருடத்துக்கு விழா உலகெங்கும் கொண்டாடப்படும். காந்தியடிகளுடைய ஞாபகத்தைப் போற்றுகின்ற சிறந்த முறை அவருடைய கொள்கைகளை மக்கள் பின்பற்றுவதேயாகும். மது விலக்கு அவருடைய சீர்திருத்தங்களுள் தலையானது. நமது வடமாகாணத்தில் மதுவருந்தும் தீயபழக்கம் காட்டுத் தீபோலெங்கும் பரவியமையினுல் நாட்டில் கொலை களவு வியபிசாரம் முதலிய பாவங்கள் அதிகரித்துவிட்டன. காந்தியடிகளுடைய பேரினுல் நமது நாட்டில் இக்கொடிய மரவரியை நீக்குவதற்கு நமது அரசாங்கத்துக்கு நம்மவர்கள் விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

முன் தவறணைகளிருந்த காலத்தில் மது அருந்துபவர்கள் தொகை குறைவாகவிருந்தது. அதற்குக் காரணம் தவறணைகள் மக்கள் குடி நெருக்கமில்லாத ஒதுக்கமான விடத்திலிருந்தது. மதுவருந்துபவர்கள் அங்கு சென்று தங்கள் இச்சையைத் தீர்த்துக் கொண்டார்கள். அத் தவறணைகளுக்குப் பெண்களும், பள்ளிக்கூட மாணவர்களும் சென்றதில்லை. இக்காலம் கள் சேர்க்கப்படும் ஒவ்வொரு மரத்தின் சுற்றுடல் ஒரு தவறணையாகும். அக்காரணத்தினுற் கள்ளருந்துபவர்கள் தங்கள் இஷ்டப்படி வேண்டிய வேளைகளில் சென்று அருந்துவார்கள். இந்த முறையினுல் கள்ளருந்துபவர்களுக்குக் கள் எந்த நேரத்திலும் எவ்விடத்திலும் கிடைக்கக் கூடியதாக விருக்கின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டாட்சி முறையாக நாட்டை அரசாண்ட காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு அககாலத்தில் நிதி மந்திரியாகவிருந்த டக்றர் என். எம் பெரேரா தென்னிலங்கையில் மரவரி முறையைக் கொண்டு வருதற்கு முயற்சி செய்தபொழுது அங்கு பெலத்த எதிர்ப்புண்டானது. பௌத்த சங்கங்கள், பௌத்த பிக்குமார், பொதுமக்கள் ஒரே மூகமாக மரவரி முறையை நாட்டிற் புகுத்துவதைக் கண்டித்தார்கள். அவ்வெதிர்ப்பின் பயனுகக் கூட்டாட்சி யரசாங்கம் மரவரிமுறையை அங்கு கைவிட்டது.

ஆனுல் துரதிஷ்டமாக வடமாகாணத்தில் மரவரி முறையை நீக்குவதற்கு மக்கள் ஏகோபித்து எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. தமிழ்த் தலைவர்கள் இவ்விஷயத்திற் கவனம் செலுத்துதல் வேண்டும். பாராளுமன்றம், நகரசபை, கிராமச் சங்கம்போன்ற மன்றங்களின் தேர்தலுக்குக் கள் வியாபாரஞ் செய்பவர்களுடைய வாக்குகளைப் பெறுதற்காக அவர்கள் மரவரி முறையை நீக்குவதற்குரிய வழி வகைகளைக் கையாளுகின்றார்களில்லைப்போலும். முற்காலத்தில் மதுவிலக்குச் சபைகள் ஊக்கமாகக் கடமை யாற்றியதனுல் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் தவறணைகளெல்லாம் மூடப்பட்டன. இப்பொழுது அத்தகைய சங்கங்கள் தோன்றி நாட்டில மதுவினுல் உண்டாகும் தீமைகளைப் பிரசாரஞ் செய்து மரவரியை நீக்க முயற்சி செய்தல் வேண்டும். எதிர் வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்வரும் அங்கத்தவர்களுள் யார் மரவரி முறையை நீக்குவதற்குச் சாதகமாக விருக்கின்றுரோ அவருக்கே பொதுமக்கள் தங்கள் வாக்குகளை அளித்தல் வேண்டும்.

மது மனிதனுடைய அறிவைக் கொள்ளை கொள்ளும் தீயபொருள். மது வருந்துகிறவனுக்குப் பாவமெது புண்ணியமெது வென்பது தெரியா. நாட்டில் மரவரி முறையினுல் மதுவருந்துபவர்கள் தொகை கூடிவருகின்றது. நாட்டில் குற்றங்கள் அதிகரிக்கின்றன. மக்கள் சேமமாக வாழ்வதற்கு இம் மரவரிமுறை நீக்கப்படுதல் வேண்டும். நமது தலைவர்களும் பொது மக்களும் இவ்வரிய பணியைக் காந்திமகானுடைய பேரினுல் புரிந்து வைப்பார்களாக.

## தாய் தந்தையரை வழிபடுக!

### சமய சாதனையே சிறந்தது

"சமயக்கல்வி, சமயக் கல்வி என்று எங்கும் தேனெனுப் பேசப்படுவதை இன்று நாம்கேட்டு மகிழக் கூடியதா யிருக்கின்றதே யொழிய— சமயவாழ்க்கை வாழ்வோர் தொகை அருகிக்கொண்டே வருகிறது" எங்கள் நாட்டுக்கு இன்று நாவலர்போன்ற ஆன்மீகச்செல்வர்கள் பலர் தோன்ற வேண்டும்; —இன்றுள்ள போலி சமூகத்தொண்டர்களையும்-போலித் தலைவர்களையும் உண்மை வழியர்களாக மாற்ற இப் புனித நாளில் திடசங்கற்பமெடுப்போம்.

வருங்காலத்தை — வளமாக ஆக்க — ஆசிரியர்கள் — அறிஞர்கள் முன்னின்று உழைக்க வேண்டும். நாவலர் பிறந்த வாழ்ந்த நாட்டில் — இன்று சைவ மக்கள் வாழும் நிலையை எண்ண வேதனையாக இருக்கின்றது. எத்தனையோ சைவ மாணவர்கள் திருக்கோவில்களில் வழிபடும்முறை தெரியாது நிற்பதை இன்று காணமுடிகிறது. அட்டாங்கநமஸ்காரம், பஞ்சாங்கநமஸ்காரம் என்றுல் என்ன? 'வேசகசன'மா? எவ்விதமாக அந்த ஆசனங்களைச் செய்யவேண்டும்? என்று மாணவர்கள் சிலர் கேட்கிறுர்கள், உண்மையான — சீரிய சமயக்கல்வி சிறுர்க்கு உரியவேளையில் — ஊட்டப்பட்டிருந்தால் நாவலர் நூல்கள் பயிற்றப்பட்டிருந்தால் இன்று நமது சமய நிலை இப்படியாகவா இருக்கும்? சிந்தியுங்கள்"

நல்லை. மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நிகழ்ந்த விஜயதசமி விழாவில் உரையாற்றும்போது யாழ். நாவண்மைமிக்கட்டு சைவ சமய அபிவிருத்திக்கழகச்செயலர் கா. இரகுநாதன் இவ்வாறு குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் தலைமையுரை நிகழ்த்திஞர். உபஅதிபர் வரவேற்புரையின்பின், திரு இரகுநாதன் தொடர்ந்துபேசும் போது, 'கடவுளை மெய்யன்போடு வழிபடவேண்டும் — தாய், தந்தையர், தீக்ஷா குரு, ஆசிரியர்கள், பெரியோர்கள், அறிஞர்களைமதித்து விசுவாசமாக — ஒழுக்க சீலர்களாகவாழவேண்டும், அவர்களது ஆசியைப் பெற வேண்டும், உலகங்குவிரத்தக்கதாக வாழ்ந்து அவருவதற்கு முயற்சி எடுக்கவேண்டும், புண்ணியதினமாய இன்று குழந்தைகளாகிய நீங்கள் இங்கே முன் குறிப்பிட்டவிதமாக வாழ்ந்து வர இருவருளை நாடி உறுதிபூணுவீர்களாக, 'தன்னொழுக்கத்துக்கு இறைவழிபாடுபெருந்துணையாகும். இப்போது சிறுவர்களாக இருக்கின்றேம் — பின்பு வயதிலுமூத்த பின் இறைவழிபாட்டை புரிவோமென்றுகருதி அதனைத் பின்போடக் கூடாது. இறைவழிபாடு இளம் வயதிலே ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். நரை, திரை. வந்து. கண் குருடாகி, காது செவிடாகி வருங்காலத்தில் இறைவழிபாடு புரிதல் முடியாத ஒன்றுகிவிடும். பிறவியின் பயனைப் பெறுதற்குரிய முயற்சியை இப்பொழுதே நாம் ஆரம்பித்தல் வேண்டும் — அதற்கான அத்திபாரத்தை நம் மாணவர் உள்ளத்தில் இட்டு வைக்க ஆசிரியர்கள் தவறக் கூடாது. மாணவர்கள் தாய் தந்தையரை விழுந்து வணங்கி அவர்களுடைய ஆசியைப்பெறும் வழக்கம் அன்று இருந்தது அவ்வழக்கங்கள் இன்று மறைந்துவிட்டன. இவ்வழக்கங்களை நாம் முன்போலக் கைக் கொண்டொழுக வேண்டும். "நாளை நாளை என்பீரேயின், நமனுடை முறைநாள் ஆவதும் அறியீர்" என்பதைச் சிந்தை செய்து, வையத்தில் வாழ்வாங்கு வாழ — நாம் ஒவ்வொருவரும் முயற்சி எடுக்க வேண்டும், "இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது உனக்குத் தெரியாதாகையால் என்றும், எக்கணமும் தவருது கடவுளைத்தியானம்பண்ணு" என்னும் நாவலர் நன்மைமொழியைச் சிந்தித்து — நானிலத்தில் நல்ல வண்ணம்வாழ நாம் எல்லோரும் முயன்றிட வேண்டும் என்றும், ஆசிரியர்கள், பெற்றேர்கள் வருங்காலச் சிறுர்க்கு வழி காட்டிகளாக வாழ்ந்து — மாணவர்களை ஒழுக்க சீலர்களாக— நானிலம் மதிக்கும் நாவலர்களாகவிளக்கச் செய்ய உழைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டனர். சரஸ்வதி பூசையுடன் வித்தியாரம்பமும் நடைபெற்றது.

(எமது நல்லூர் நிருபர்)

## அநுரதபுரத்தில் குன்றக்குடி அடிகள்

ஈழம் வந்துள்ள குன்றக்குடி ஆதீன மடாதிபதி தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களை அநுராதபுரிக்கு அழைத்து ஆங்கு அருள் உரைகளை நிகழத்துவிக்கும் புனிதப்பணியில் அநுராதபுரம் விவேகானந்த சபையும், ஆங்குள்ள சைவத்தமிழ் அபிமானிகளும ஈடுபட்டு உழைத்துவருகின்றுர்கள். அநுரதபுரம் கதிரேசன் கோவிலில் சுவாமிகளின் சொற்பொழிவு நிகழ ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

(எமது அநுரதபுரிநிருபர் ஸ்ரீப.ம.)

## சித்தாந்த சைவமகா நாடு

["இந்துசாதனம்" அபிமான நிருபர்
திரு. மா. பாலசுப்பிரமணியம்அவர்கள் சிதம்பரம், தென்னிந்தியா]

புறச்சந்தான குரவர் நால்வருள் முதல்வரான, ஸ்ரீ மெய்கண்ட தேவருக்கு 'சிவஞானபோதம்' என்ற சித்தாந்த சைவ முதல் நூலை உபதேசம் செய்துள்ள தலமான திருவெண்ணெய் நல்லூரில், திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ மெய்கண்டதேவர் ஆலயத்தில் புரட்டாதித் திங்கள் 1ɔ ஆம்நாள் விஜயதசமியன்று ஆதீனத்தன் 22 ஆவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ அமபலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் முன்னிலையில் சித்தாநத சைவ 17 ஆவது மகாநாடு சித்தாந்த சைவ பிரமுகரான சென்னை ஸ்ரீ எஸ். சென்னியப்ப முதலியார் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது.

ஸ்ரீ ல ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் மகாநாட்டின் தலைவர் ஸ்ரீ சென்னியப்ப முதலியாரையும், மகாநாட்டின் திறப்பாளரான தஞ்சாவூர் வழக்கறிஞர் ஸ்ரீ எஸ். கோபால் ஐயரையும விலை உயர்ந்த பொன்னுடைகள் போர்த்தி மலர்மாலைகள் அணிவித்து வரவேற்ருர்கள். ஆதீனவித்துவான் குடந்தை ஸ்ரீ த.ச மீனுட்சி சுந்தரம்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்துகையில் இத்தலத்தில் 16 ஆண்டுகளாக சித்தாந்த சைவ மகாநாடு நல்லவளர்ச்சி அடைந்து கொண்டு வருகிறதைக் காண்கின்ரேம், ஆகவே சித்தாத சைவபெருமக்கள் சித்தாந்த நூல்களைப் படித்து பயன் பெறல் வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பிரபல வழக்கறிஞரான தஞ்சாவூர் ஸ்ரீ எஸ். கோபால் அய்யர் மகாநாட்டைத்திறந்து வைதது்பேசுகையில் திருவெண்ணெய்நல்லூர் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ள தலமாகும் இத்தலம் போல் ஒரு தலம் வேற்று நாடுகளில் இருந்திருக்குமானுல் அந்தத் தலத்தை அங்குள்ள மக்கள் வேறுவிதமாகவே வைத்திருப்பார்கள், உதாரணமாக ஷேக்ஸ்பியர் பிறந்த இடம் அழகுமிக்க இடமாக இருந்து வருவதை நன்கு அறியலாம் என்றும் கூறினர்

மேலும் வழக்கறிஞர் ஸ்ரீ கோபால் அய்யர் பேசுகையில் தற்காலம் நாட்டில் பலசிலைகளும் பலமண்டபங்களும் எழுப்பப்பட்டு வருகின்றன. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நம் நினைவிலிருந்து கொண்டுவருகிற ஸ்ரீ மெய்கண்டதேவருக்கு சிலைஎழுப்பவேண்டுமென்ற எண்ணம் தோன்ருமலே இருந்து வருகின்றதென தன்னுடைய கவலையைத் தெரிவித்துக் கொண்டார். வழக்கறிஞர் ஸ்ரீ. எஸ். கோபால் அய்யர் மேலும தொடர்ந்து பேசுகையில் சைவத்திற்குத் தலைநகராகத் திருவாவடுதுறைஆதீனம் விளங்கிக் கொண்டு சித்தாந்த சைவத்தை நன்கு வளர்த்துக் கொண்டு வருகின்றது.

மண்ணில் நல்லவண்ணம் வழலாம் என்பதனை நமது சைவசித்தாந்த சாஸ்திரதோத்திர நூல்கள் கூறியுளது, ஆகவே சைவ மக்கள் சைவ சித்தாந்த சாஸ்திர தோத்திர நூல்களைப்படித்து பயன் பெறமுற்படல் வேண்டுமெனறும் கேட்டுக் கொண்டார்.

x x x

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகபரமாசாரிய சுவாமிகள், திருத்துறையூரில் புறச்சந்தான குரவர் நால்வருள் ஒருவரான ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள் குருபூஜை விழாவை புரட்டாசித் திங்கள் 5 ஆம் நாள் பூரநட்சத்திரத்தன்று சிறப்புடன் நடத்திவைத்தார்கள்

காலையில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்று பகலில் மகேஸ்வர பூஜையும் நடத்திவைக்கப்பட்டது.

### ஒரு விண்ணப்பம்

"இந்துசாதனம்" தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளின் சந்தாதாரரைத் தங்கள் சந்தாப்பணத்தை விலைவயின்றி செலுத்தும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக் கொள்ளுகின்ரேம். மனேஜர்.

யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்த ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 8 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை

எங்கள் காரியாலய மூ . . அறிந்துகொள்ளலாம்.

— மனேஜர்.

## காந்தி அடிகள் உள்ளம் உவக்க

(2-ம் பககத் தொடர்ச்சி)

இவர் மனைவியார் பெயர் கஸ்தூரிபாய். கணவனின் உள்ளக் கருத்துப்படி ஒழுகும் பண்புள்ள இலலக்கிழத்தியாய்த் திகழ்ந்தார்.

மனுக்குலத்திறகு மகத்தான சேவைசெயய மானிலத்தில் உதித்த காந்திஜி அன்புள்ளம் கொண்டவா. மனிதவுணர்வுகளை மதித்து நடந்தவர். மக்களை ஈடேற்றுவதற்காகத் தொண்டு செய்தவர். அவர் தேசபக்தர். சிறந்த தெய்வபக்தர். மாந்தரின் அறியாமை இருளை யகற்ற அறிவு ஒளிதந்தவர் சத்தியம், அஹிம்சை, அன்பு சேவை ஆகியவற்றில் தளரா நம்பிக்கை கொண்டிருந்தவர். மக்களுக்குத் தொண்டு செய்து மாந்தருள் ஒரு தெய்வமாகியவர். உலகத்தை உய்விக்க அரும் பெரும் கருத்துக்களைக் கூறிப்போந்தவர் மக்களிலே அவர் தெய்வத்தைக் கண்டார். பல்வகையாலும் தாழ்ந்திருந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த விடுதலை என்னும் தீபத்தை ஏற்ற அல்லும் பகலும் அயராது உழைத்தவர், 'ஒற்றுமையே பலம்' என்ற அரும் தத்துவத்தைத் தம் வாழ்க்கை முறையால் வெளிகாட்டிய சான்றோர் சாதி, மதபேதத்தை அறவே வெறுத்தவர். மது, மாது, புலால் முதலியவற்றின் பற்றுகளை முற்றாக ஒறுத்தவர் தாய்நாட்டின் விடுதலைக்காக போர் முனையில் நின்று உழைத்து, சிறை சென்றவர். அங்ஙனம் அளப்பரும் பண்புகளைக் கொண்ட அன்னாரின் சேவை மனப்பான்மைக்கும், பெருமைக்குமாக ஒருவருடகாலம் உலகம் அவரைச் சிறப்பாகப் பேற்றி வணங்க நூற்றுண்டு விழாவைக் கொண்டாடவிருக்கிறது.

அண்ணல் காந்தியின் நூற்றுண்டுவிழாவைக் கொண்டாடுமுன்பு அதைக்கொண்டாடும் தகைமை நமக்கு எந்தவகையில் உண்டு என்பதை ஒவ்வொருவரும் உணர்வது பெரிதும் நன்மை பயக்கும். காந்தீயத்தை எவ்வளவு தூரம் கைக்கொண்டு அவரின் கொள்கைகளை நிறைவேற்றி யிருக்கிறோம். அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சென்றிருக்கிறோம் என்பவையெல்லாம் கேட்கத்தக்க கேள்விகளேயாம். காந்தியடிகள் மீண்டு உலகில் தோன்றினுல் நமது ஒற்றுமைக்குலைவைக் கண்டு வேதனைக்கண்ணீர் வடிப்பார் எத்துறையிலும் பொருமை, வஞ்சகம், பகை, பூசல் என்பவைகளால் தமிழினம் நிமிடத்திற்குநிமிடம், நாளுக்குநாள் அழிந்து போவதைக் கண்டு எள்ளி நகையாடுவர். பண்பாட்டுச் சிதைவு கண்டு உள்ளம் நோவர் போலிப்பெருமைக்காகவும், வறட்டுக்கௌரவத்திற்காகவும், பட்டம் பதவிகளுக்குமாக தம்பொன்னுன நேரத்தை மண்ணுக்குவதைக் கண்டு இவர்களேன் தனக்கு நூற்றுண்டு விழா வெடுக்கிருர்கள் எனக் கேட்பார் உண்மையில் தனிமதிப்பிருந்தால் அவர் எதற்காக வாழ்ந்தாரோ, மக்களிடம் வேண்டிக் கெண்டாரோ, எதை வற்புறுத்தினுரோ அதை மக்கள் நிறைவேற்றினுல்தான் அவரது உள்ளம் இவ் விழாவால் சாந்தியடையும்.

## எல்லாம் நன்மைக்கு!



பத்தர்: 'குரு' 'புதன்' வீட்டுக்கு வாருராம்! இந்த வீடு மாற்றம் நாட்டில் பல நன்மைகளை யுண்பேண்ணும் அப்பிடின்னு ஜோஷிபலன் பேசுது! கடைசச்சனியான (12-10-68) நாளை பின்னேரம் இந்தக் கிரு ஹப்பிரவேசம்நிகழுதாம்! 'வையகம் சிறநதிட' வாழ்த்துவம்!

சித்தர்: "என்னண்ணே! வயலில் நெற் பயிரெல்லாம வாடி எரியுது! மழை மாரிய நுகிப்போச்சு! அரசியற்தலைவர்களது பேச்சையும் போக்கையும் பார்த்தா தடுமாற்றமும் ஏமாற்றமும் தருவதாயிருக்கு! பிறகு என்ன நன்மை வந்து குவியப்போகுது? "எதுவோ எங்கள் யோகர் சுவாமிகள் சொல்லுவார்கள் 'எல்லாம சிவன் செயல்' — 'எல்லாம் நன்மைக்கே என்று. இந்த வீடு மாற்றம் – எம்மவர்கு வீடுபேற்றைத்தருவதாகுக!

!! நாயன்மார்-தாதன் !!

## நன்மை யுண்டாகும்

புரட்டாசி 26உ (12-10-68) சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் சிங்கராசியில் தங்கி நிற்கும் குரு பகவான் கன்னி ராசியில் புதனுடைய வீட்டில் பிரவேசிக்கின்ருர். அன்னியோன்னியமான பாதையில் அரசகருமங்கள் நடைபெறுமெனவும் கல்வித்துறையில் முன்னேற்றமகாணப்படுமெனவும்டாம்பீக வாழ்வுக்கு இடமிருக்காதெனவும் கௌரவம், பொறுமை இரக்கம் மக்கள்உள்ளத்தில் குடிகொள்ளுமெனவும் பலன் சொல்லுகின்ருர்கள்.

## ஆங்கில ஆசிரியர்கள்

நாட்டில் ஆங்கிலப் பாடங்களை வித்தியாசாலைகளில் கற்பிக்கத்திறமையுள்ள ஆசிரியர்கள் தேவைப்படுகின்றமையினுல் இளைப்பாறிய ஆசிரியர்களை நியமிக்கக்கல்வியமைச்சர் தீர்மானித்துள்ளனர் பென்ஷன் பணத்தை விட அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ 20 ', வேதனம் வழங்கப்படும் அவர்கள் வாசஞ்செய்யும் இடங்களிலேயே நியமனஞ் செய்யப்படுவர்

## தசாகக் கிரியைகள்

5-10 68 சிவபதமடைந்த முன்னேஸ்வரம் தேவஸ்தான ஆதீனகர்த்தா விடஜோதி, வேதாகம விற்பன்னருமாகிய பிரம்மஸ்ரீ சி. பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் தசாகக் கிரியைகள் 14-10-68 திங்கட்கிழமையன்றும் கிருஹப்பிரவேசம் 17-10-68 வியாழக்கிழமையன்றும் நடைபெறும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

D. C. J.

வழக்கு இல. MB6349

1. வேலுப்பிள்ளை இராசையா
2. பெண் யோகேசுவரி

சண்டிக்குளி, யாழ்ப்பாணம் —வழக்காளி

எதிராக

1. விஞசித்தம்பி மகாலிங்கம் பெண்கமலம்

மீசாலை சாவகச்சேரி வடக்கு —எதிராளி

யாழ்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB 6349-ம் இலக்க வழக்கில் எனக்கிக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக காணி 1968 ம் ஆு ஐப்பசி மீ 26 உ சனிக்கிழமை பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 638/— ம் 21-1-64 தொடக்கம் 14-12-64 வரைக்கும் ரூபாய் 500/—க்கு 12% வித வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை5 வித வட்டியும் கோட்டுச் செலவு 181 ரூபா 35 சதம் ஏற்பட்ட செலவு 120 ரூபா 75 சதம் முடிவான செலவு 37 ரூபா -25 சதம் நிகழவிருக்கும் செலவு ரூபாய் 23 ரூபா—35 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி இறைகலட்டி குளிலப் பரப்பு 4 இதில் வடக்குபுறமாக நிலப்பரப்பு 1 வீடும் வான்பயிர் செய்பயிர்களும் மற்றும் அதைச் சேர்தவைகளும் ஒரு பரப்புக்கு எல்லை கிழக்கு விஞசித்தம்பி குமாரவேலுவும் மறுவும் வடக்கு நடராசா பெண் அன்னம்மா விஞதனம் மேற்கு கந்தையா பெண் அன்னப்பிள்ளை யினுதனம். தெற்கு விஞசித்தம்பி மகாலிங்கத்துக்கும் பெண் கமலத்துக்குரியவாதனம் இதடங்கலும் பதிவு இலக்கம் F 40 / 248

மா. முருகேசு, J. P.
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"இந்திரபவனம்"
புங்குடுதீவு, 18-8-68.
எம். 194 27-9-68.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மாவட்டக் கோடு, யாழ்ப்பாணம்.

இடைக்காடு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் இடைக்காடு வழக்காளி

இல. M.B. 8323 எதிராக

நாகன் சின்னக்குட்டி கதிரிப்பாய் அச்சுவேலி

எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M. B. 8323-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1968-ம் ஆ. கார்த்திகை மீ 26 ந் உ செவ்வாய்க்கிழமை (26-11-68) காலை 9-30 மணிதொடகம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதலும் வட்டியுமாக ரூபா 966/-இன்னும் 25-5-66 தொடக்கம் 3-7-67 வரைக்கும் ரூபா 780-35 சதத்திற்கு ஐந்துவித வட்டியும் கூட்டிக் கூட்டிய தொகைக்கு 3-7-67 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும்வரைக்கும் ஐந்து வித வட்டியும் செலவு ரூபா 245-92 சதமும் முன்பதாகக் கொடுத்த ரூபா 100/- கழித்து மிகுதி.

ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்குப்பகுதி, அச்சுவேலிக கோவிற்பற்று கதிரிப்பாயிறை "கொன்னைவாரிக் கலட்டி' பர நில லா 7 குளி 15, 5/24 வீடும் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு வெள்ளையன் சித்தனினுதனம், வடக்கு கணபதி பொன்னனுக்குரிய வாதனம், மேற்கு கந்தன் கிட்டினனுக்கும் மறுபேருககு முரிய வாதனம், தெற்கு ஒழுங்கை, தெற்கெல்லையிலிருந்து வடக்கே கணபதி பொன்னனிற்கும், செம்பன் வேலனுக்குமுரிய காணிகளுக்குப் போகும் 9 அடி ஒழுங்கையின் பாவிப்பு பிற நீங்கலாக மேலே குறிக்கப்பட்ட நாலு எல்லைக்குள்ளிருக்கும் காணி முழுவதும்.

தா. க. பொன்னுத்துரை J. P.
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
"அ.லெகம்"
28/1, யாழ்வீதி. யாழ்ப்பாணம்.
4—10—68.
M 321 11-10-68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அப்புக்குட்டி கந்தையா. குப்பிளான். தற்சமயம் செந்துல் கோலாலம்பூர் மலேசியா அவரின் அற்ரேனி கந்தையா சரவணமுத்து குப்பிளான் —வழக்காளி

இல M B 9562 எதிராக

பொன்னம்பலம் மகாலிங்கம் குப்பிளான், குப்பிளான் வைத்திலிங்கம் தம்பிராசா கைம்பெண் அன்னப் பூரணத்தின் சொத்துக்கு சட்டபூர்வமான பிரதிநிதி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9562 ம் இலக்க வழக்கில் எனககுக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிககப்படும் 2 துண்டுக காணிகளும் 1968 ம் ஆு கார்த்திகை மீ 30 (முப்பதாம்) உ சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தந்தக காணிகளுககுள் நின்று பிரசித்த ஏலத்தல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 11392-75 ம் 11-11-67 தொடக்கம் 30-4-68 வரைககும் ரூபா 3000/- க்கு 7 வித வட்டியும், ரூபா 4000/- க்கு 9 வித வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுககும்வரை 5 வித வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 658-68 சதம்

ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோவிற்பற்று புன்னாலைக்கட்டுவன் இறை இலக்கையிட்டியும் தெல்லப்பையும் கஞ்சிட்டியும் மறுபிரிவுகளும் நில. பர. (10) பத்து இதில் வடக்குப் பக்கமாக நில. பர. ஒன்று முழி ஒன்று நீக்கி மிகுதி பரப்பு 8 குழி 17 மேற்குப் பக்கமாய் இப்பேர்கொண்ட காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழமையான வழி வாய்க்காலும் தூர்வைப் பங்கும் பாதைப் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கு விசுவநாதரின் உரிமைக்காரரினுதனமும் விசுவநாதர் இராமலிங்கத்தினுதனமும், வடக்கு அருணாசலம தம்பிநாதருக்கும் மறுபேர்களினுதனமும், மேற்கும் தெற்கும் வயித்திலிங்கம தம்பிராசாவின் உரிமைக்காரரின் ஆதனம் இவ் வெல்லைக்குட்பட்டவை யடங்கலும் பதிவு H 826/ 9.

2. மேற்படி புன்னாலைக்கட்டுவன் இறை தெவிராப்பியன் நில பர 15 குழி 7½ பனைகளும் எல்லை கிழக்கு பொன்னம்பலம் பெண் தனலட்சுமியும் ரோட்டும், வடக்கு ரோட்டு, மேற்கு தம்பிஐயா பெண் செல்லம்மாவின் உரிமைக்காரரினுதனம், தெற்கு ஏழாலை ஊரெல்லை இதடங்கலில் சொரியலாய் 1/3 பங்கும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

"வேல்பதி"
புத்தூர், 31-8-68.
சி. சங்கரப்பிள்ளை,
கோமிசனரும் விலைமதிப்பாளரும்
எம் 228 11-10-68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

சுளிபுரம் சின்னையா ஞானச்சந்திர மூர்த்தி —வழக்காளி.

இல. M.B. 9334 எதிராக

தொல்புரம் சந்தையடி, தொல்புரம் சின்னத்தம்பி கிருஷ்ணர் — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 9334-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1968 ஆ. கார்த்திகைமீ 21-ந் திகதி வியாழக்கிழமை (21-11-68) முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 1194-ம் 12-8-67 தொடக்கம் 16-3-68 வரைக்கும் ரூபா 800-க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 435-95 ம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று தொல்புரம் இறை 'வீரவத்தையும் கருவேயும்' பா. நில இலா 2 (இரண்டு) செய்பயிர் வான்பயிர்களும் பொன்னுச்சிப்பிள்ளையின் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும். எல்லை கிழக்கு நாலுமுழ அகலமுள்ள ஒழுங்கை வடக்கு கிருஷ்ணர் கைம்பெண் தங்கமுத்துவுக்கும் சுப்பிரமணியம் கைம்பெண் முத்தாச்சிக்குமுரிய ஆதனம். மேற்கு தம்பையா அப்பையாவின் ஆதனம். தெற்கு பூபாலபிள்ளை பெண் பொன்னுச்சிப்பிள்ளையினுதனம்.

பதிவு E 245/97.

18, 5-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
அ. வெற்றிவேலு
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
(எம். 226 11-10-68)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M. B. 9108
தம்பு சின்னத்தம்பி
கைம்பெண் சின்னப்பிள்ளை
சுழிபுரம் மேற்கு
வழக்காளி
எதிராக
1. முருகன்சின்னப்பொடியனும்
2. வைத்தியன் முருகன் கைம்பெண் செம்பி இருவரும்
சுழிபுரம் மேற்கு —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9108-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1968-ஆம் வருடம் (3-11-68) நவம்பர் மாதம் 3-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 1704-ம் 26-5-67 தொடக்கம் 22-3-68 வரைக்கும் ரூபா 1200-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 465-05 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானை கோயிற்பற்று சுழிபுரம் இறை "முத்தியன் தோட்டமும்" மாதா தோட்டமும் பரப்பு நில லாச்சம் 6¼ இதில் கிழக்குப் பக்கமாக 3 பரப்பு புறநீங்கலாக. மிகுதி மேற்குப் பக்கமாக பரப்பு நில லாச்சம் 3¼ம் வான்பயிர் செய்பயிர்களும் கிணறும் எல்லை கிழக்கு முருகன் பொன்னனின் ஆதனம். வடக்கு ஒழுங்கையும் இலங்கன் முருகனின் ஆதனமும். மேற்கு ஒழுங்கை தெற்கு ஆறுமுகம் கந்தையாவின் ஆதனம். இது அடங்கலும். பதிவு இல. E 364/142.

சி. செ. மாரிமுத்து,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
விதானை வளவு, சித்தன்கேணி
20-8-68 (எம் 225 11-10-)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல M.B. 7763
சண்டிலிப்பாய் அம்பலவாணர் கைம்பெண் சிவக்கொழுந்து
—வழக்காளி
எதிராக
(1) வேலுப்பிள்ளை மகாதேவன்
(2) C. T. S, மூர்த்தி
(3) சின்னத்தம்பி தங்கராசா, 81/6 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம்
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 7763-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1968-ஆம் வருடம் (நவெம்பர், கார்த்திகை மாதம் 23-ஆந் திகதி (23-11-68) சனிக்கிழமை முற்பகல் 9-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 1391/-ம் 19-10-65 தொடக்கம் 24-1-68 வரைக்கும் ரூபா 1000-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 438-61 (ஏற்பட்ட செலவு ரூபாய் 341-62 சதம். வெளியாத்துச் செலவு ரூபாய் 53/87 சதம். ஏற்படும் செலவு ரூபா 43/12 சதம்)

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை கோயிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கு இறை "ஆசனை" என்னும்காணி நெ. பா. 14. எல்லை கிழக்கு குமாரசாமி பெண் ஆச்சிப்பிள்ளையின்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
காங்கேசன்துறை தையிட்டி. பொன்னம்பலம் இராசையா
— வழக்காளி.

வழக்கு இலக்கம். M B 9233 எதிராக
காங்கேசன்துறை தையிட்டி 1. அப்புக்குட்டி கணபதிப்பிள்ளையும்
பெண் 2. பரமேஸ்வரியும் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9233-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1968-ம் ஆண்டு கார்த்திகைமீ 23-ந் உ சனிக்கிழமை (23-11-68) முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல்வட்டி ரூபா 6916-ம 12-7-67 தொடக்கம் 8-5-68 வரைக்கும் ரூபா 5000 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 522-10-ம (ஏற்பட்ட செலவு ரூ 342-30; வெளியாத்துச் செலவு ரூ 91-20, ஏற்படக்கூடிய செலவு ரூ 88-60)

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று தையிட்டி இறை நிலைப்பாய்' பா. நில. லா 10. இதில் மேற்குப் பக்கமாக நிந்த மான லா நில இலா 4¾ (நாலே முக்கால்) வீடும் பயிர்வகைகளும எல்லை கிழக்கு திருமதி கந்தையா செல்லையாவினுதனம் வடக்கு ஆறுமுகம் கந்தையாவுக்கும் சுப்பிரமணியம் பெண் இராசம்மாவுக்குமுரிய காணி. மேற்கு ரோட்டு. தெற்கு செல்லப்பா அப்புத்துரையினுதனம். இவற்றுப்பக்கும் தூர்வையும் வீட்டின் வடக்குத் திசைகவுள்ள 5 அடி ஒழுங்கைப் பாவிப்புரிமையும் கூட்ட இதடங்கலும்,

அ வெற்றிவேலு
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
18, 5-ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம், 13-9-68
(எம் 2?7 11-10-68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
இல- M B 9332.
1. கதிர்காமு இராசேந்திரம் 2. தாமர் கதிர்காமு
—எளாலை —வழக்காளிகள்
எதிராக
1. தில்லையம்பலம் கைம்பெண் லெட்சுமி
2. தில்லையம்பலம் பாலசிங்கம்
3. தில்லையம்பலம் பரஞ்சோதி கட்டுவன் —எதிரிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 9332-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் காணியை 1968 ஆம் ஆண்டு (கார்த்திகை) மாதம் 3-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— ரூபா 2618-66 ம 11-8-67 தொடக்கம் 16-3-68 வரையில் ரூபா 2000-ற்கு 8 வீத வட்டியும் அதன்பின் 'பணம் முற்றாக இறுபடும் வரையில் முழுக் கூட்டுத் தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 301-57ம்.

கீழே சொல்லப்பட்ட 'குளந்தனியும் மவளவன் கூடை''யும் பரப்பு நில லாச்சம் 7½. இதை முதலாம் ஈடாகப் பிரசித்த நொத்தாரிசு கணபதிப்பிள்ளை முகதாவில 15-7-61 இல 4627ம இலக்கத்தில முடிந்த ஈட்டுறுதிப்படி ரூபா 3000-ற்கும் வட்டிக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மிகுதியான நிச்சயப்பளை'' என்னும் காணி பா. நில. லாச்சம் 6¾ இதையும் மேற்சொல்லப்பட்ட நொத்தாரிசு முகதாவில 13-1-63 இல முடிந்த 4779 ஆம் இலக்கம் கொண்ட ஈட்டுறுதிப்படி ரூபா 2500-க்கும் வட்டிக்கும் முதலீடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தெல்லிப்பளைக் கோயில்பற்று கட்டுவன் இறை வலிகாமம் வடக்கு ''குளந்தனி பா. நில லாச்சம் 7½ யும் மேற்படி இறை ''நிச்சயம்பளை'' பா நில. லாச்சம் 6¾ இந்த இரு காணிகளின் முளுப்பரப்பு 14¼ம செய்பயிர்களும் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றில பங்கும் வீடுகளும் இந்தப் பரப்பு 14¼ ற்கு எல்லை கிழக்கு ஐயாத்துரை பெண் தங்கச்சி அம்மாவினதும் மறுபெயர்களினதும் ஆதனம். வடக்கு சண்முகம் சின்னத்தம்பியினதும் மறுபெயர்களுடையவும் ஆதனம். மேற்கு ரோட்டு தெற்கு வைத்திலிங்கம் பெண் செல்வபாக்கியத்தினதும் வன்னமணி மனைவி முத்தம்மாவினதும் பங்காளர்களினதும் மறுபெயர்களுடையவும் ஆதனம். இந்த எல்லைகளுக்குட்பட இதடங்கலும். முற் பதிவு H 363/158.

"முருகன் இல்லம்"
இணுவில், 18-9-68.

க, செல்வத்துரை,
கோமிஷனரும் விலைமதிப்பாளரும
(M 220 11-10-68)

உரிமைக்காரர், வடக்கு சுப்பிரமணியம் கைம்பெண் இராசம்மாவும் ஆறுமுகம் சேதுபதியின் ஆதனமும். மேற்கு கணபதிப்பிள்ளை அருணாசலம் முருகேசபிள்ளை கைம்பெண் தங்கம்மாவும் கந்தையா சிதம்பரப்பிள்ளையின் ஆதனங்களும். தெற்கு கந்தையா சுப்பிரமணியமும் பங்காளரின் ஆதனமும் உண்டு பதிவு இல. E 150/149.

இ. கனகரெத்தினம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
நம். 35/2 கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
எம். 222, 11-10-68,

## பிழை திருத்தம்

அதை இப்படி வாசிக்கவும்

4-10-68-இல வெளி வந்த 'இந்துசாதனம்' இதழில் வழக்கு இலக்கம். A 960 என்ற கோட்டு விற்பனவு விளம்பரத்தில் தீர்வை தொகை என்ற பகுதியில் ரூபா 8012-75-ம், என்பதன் பின்பு ரூபா 5000-ம் என்று சேர்த்தும், அதன்பின் முழுத்தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் என்றிருப்பதை நீக்கியும் ஆதனவிபரத்தில் தையிட்டி இறை ஆவளை நில பா. 2 என்றிருப்பதை நில லா 22-ம் என்றும் திருத்தி வாசிக்கவும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இரத்தினசாமிஐயர் சபாரத்தினம் தெல்லிப்பளை தென் மேற்கு தெல்லிப்பளை.
வழக்காளி
இலக்கம் M,B. 6987
எதிராக
1 சின்னப்பு சபாபதியும் பெண்
2. கண்மணி இருவரும் அளவெட்டி
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 6987 ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்துள்ள கோட்டுக் கட்டளையின்படி, கீழ்க்காணும் ஒரு துண்டுக் காணியை 1968-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6-ம் திகதி புதன்கிழமை (6-11-68) முற்பகல் 10 மணி தொடக்கம் அக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 2332/- 19-10-64 தொடக்கம் 15-2-66 வரைக்கும் ரூபா 1250/- க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 252/91 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளைக் கோவிற்பற்று தெல்லிப்பளை மேற்கிறை ''தேவரியாவுடை'' இதன் கில பரப்பு 2½ பனைகளும கிணறும வெளினும் எல்லை கிழக்கு வைரவப்பிள்ளை செல்லையாவும் ஆனவார் ஐயத்துரையும் பங்காளர்களும வடக்கு ஆனவார் ஐயாத்துரையும் பங்காளர்களும் வைரவப்பிள்ளை செல்லையாவின் ஆதனம் மேற்கு முகப்பு ஒழுங்கையும அளவெட்டி கிராமஎல்லையும் தெற்கு அளவெட்டி கிராம எல்லை இவ்வெல்லைகளுக்குட்பட்ட வைகளில் குறிப்பிட்ட கிணற்றில் வடகிழக்குக் காணிக்குரிய தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்காலும மேற்கு ஒழுங்கை முகப்பிலிருந்து குறிப்பிட்ட வடகிழக்குக் காணிக்குப் போகும்பாதை உரிமையும இக்காணிக்குத் தெற்கெல்லைப்பக்கமாய் கிழக்குக்காணிக்குப் போகும் 6 முழ அகலமான பாதை உரிததும் பிறநீங்கலாக மீதிமுழுவதிலும் சொரியலாய் 3/8 பங்கும் அதைச்சேர்ந்தவைகளும்.

22. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம், 31-8-68.

வே. கோபாலபிள்ளை,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
( எம் 232, 11-10-68)

## கோட்டு விற்பனவு விளம்பரம

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
சிதம்பரப்பிள்ளை கைம்பெண் சரஸ்வதி
சுண்டிக்குளி யாழ்ப்பாணம் வழக்காளி
இல M.B, 7294 எதிராக
யோசேப் அப்பாத்துரை வண்ணார்பண்ணை தென் மேற்கு யாழ்ப்பாணம், எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7294-ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகள் என்னால் 1968-ம் ஆண்டு (கார்த்திகை) மீ 9 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா, 2860/- ம் ரூபா 2000/- க்கு 15-3-65 தொடக்கம் 29-5-67 வரை 12வீதமான வட்டியும அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 376-14 சதம்.

காணிகளின விபரம்

1. யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக் இறை ''ஐயூற்றுவான்வயலும் மறுபிரிவுகளும்'' பர. கெ. இல ஒன்று (பர. கெ. இல.1) பயிர்வகைகளும் எல்லை கிழக்கு நாகலிங்கம் சிவகுரு கைம்பெண் வள்ளியம்மைக்கும் இராமலிங்கம சிவகுருநாதர் கைம்பெண் விசாலாட்சியம்மாவிற்குரிய ஆதனம் வடக்கு இ. சிவகுருநாதரால் ஒழுங்கைக்காக ஒதுக்கப்பட்ட நிலம் மேற்கு கீழே சொல்லப்படும் இரண்டாம ஆதனம் தெற்கு சிதம்பரப்பிள்ளையின் உரிமைக்காரர்கட்குரிய ஆதனம் இதடங்கலும்.

2. ஷை இறை ''ஐயூற்றுவான் வயலும் மறுபிரிவுகளும்'' பர. கெ. இல ஆறு (பர. கெ. இல,6) வீடும் கோட்டிலும் தென்னைமரங்களும் எல்லை கிழக்கு எதிராளி (யோசேப் அப்பாத்துரை) க்குரியவாதனம் வடக்கு இ. சிவகுருநாதரால் ஒழுங்கைக்காக ஒதுக்கப்பட்ட நிலம் மேற்கு சண்முகரத்தினம் பெண்சாதிக்குரியவாதனம் தெற்கு சிதம்பரப்பிள்ளையின் உரிமைக்காரர்கட்குரியவாதனம் இதடங்கலும் அதற்குரியவைகளும் இவ்வாதனம் J.D.வீரசிங்கம் அவர்களால் 1950-ம் ஆண்டு மாசி மீ 10 ம் திகதி 2604-ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட அளவுப் படத்தில் 1-ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது.

காரைநகர், 1968-ம் ஆண்டு
புரட்டாதிமீ 11 உ

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனரும் ஏலவிற்பனையாளரும்.
(எம். 224 11-10-68)

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

காரைநகர் வடக்கு நெடுங்காடு சயம்புவீதி திரு. அருணாசலம் தம்பிப்பிள்ளை அவர்களிடம் 1967-ம் ஆண்டு யூலை மீ 1-ஆந் திகதிக்கு (1-7-67) முன் அடைவு வைத்து மீட்கப்படாதிருக்கும் அடைவுகள் 1968-ம் ஆண்டு அக்டோபர் மீ 30 உ (30-10-68) புதன்கிழமை முற்பகல் ஒன்பதரை மணி தொடக்கம் ஷை அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி செ, குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்,
கொமிஷனரும். விலைமதிப்பாளரும்
M, 211, 4, 11-10-68.

'இராசகிரி'
143. காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம். 18-9-68.

ஆறிருதடந்தோள்வாழ்க அறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடியா ரெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 11—10—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்,